கும்பகோணம் சிறப்பு திட்டக் கோட்ட செயற்பொறியாளர், பொபது, நீஆது,
அவர்களின் செயல்முறைகள்.

பிறப்பிப்பவர்: பொறி.அ.கண்ணன், எம்.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து. நீ.ஆ.து.,

<u>செயல்முறை எண். கோ.2(176)/2020 /நாள். 15 .12.2020.</u>
<u>கார்த்திகை - . திருவள்ளுவராண்டு 2051</u>

**பொருள்:** பணியமைப்பு — பொபது-நீஆது - த.நா.அ.ப.தொகுதி — திருமதி. வெ. ஜெயஶ்ரீ. (பி.தே. 08.04.1982) உதவியாளர் - உதவியாளர் பதவியின் பணியினை 10.01.2020 முப முதல் வரன்முறைபடுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**
1) முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொபது சென்னை அவர்களது செ.மு.ஆணை எண். எஸ்3(1)/30358/2019 நாள். 15.11.2020.
2) கண்காணிப்புப்பொறியாளர் நீஆது கீழ்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர் அவர்களது செ.மு.ஆ எண்.166/நி1/2020/ நாள். 08.01.2020.

=====

<u>**ஆணை:-**</u>

முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொபது சென்னை அவர்களது செயல்முறை ஆணையின்படி தட்டச்சர் பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வில் பணியிடமாறுதல் வழங்கப்பட்டு திருமதி வெ. ஜெயஶ்ரீ. (பிறந்த தேதி-08.04.1982) அவர்கள் 10.01.2020 முற்பகல் முதல் உதவியாளராக தஞ்சாவூர் கீழ்காவிரி வடிநில வட்டத்தில் பணியேற்று தற்பொது பணியிட மாறுதலில் கும்பகோணம் சிறப்பு திட்ட கோட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் தனியரது உதவியாளர் பணியினை வரன்முறைபடுத்திட, தனியர் உதவியாளராக பணியேற்ற 10.01.2020 முற்பகல் முதல் தனியர் மீது துறை ரீதியிலான குற்றச்சாட்டுகளோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதுமில்லை எனவும், தனியர் மீது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான வழக்குகள் ஏதுமில்லை எனவும், தனியர் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும், இவரது பணிப்பதிவேடு மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் தெரியவருகிறது.

த.பா..

அதனைத்தொடர்ந்து இவரது உதவியாளர் பணி தனியா பதவி உயர்வில் உதவியாளராக பணியேற்ற நாளான 10.01.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைச் சட்டம்) சட்டம் 2016-இன் பிரிவு 28(1)-இன்படி பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து இவர் பவானிசாகர் தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர், நீஆது பொபது.
சிறப்பு திட்டக் கோட்டம், கும்பகோணம்.

பெறுநர்-

திருமதி வெ. ஜெயஸ்ரீ.
உதவியாளர்
சிறப்பு திட்ட கோட்டம். கும்பகோணம்.

**நகல்:** பணிப்பதிவேட்டிற்கு

**நகல்:** இருப்புக்கோப்பு